**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.156/2020**

PW-1

| Name | ராமச்சந்திரன்(PW1) | | |
|---|---|---|---|
| Father's Name | ஐயாசாமி | Calling | |
| Village | வேலம்பாளையம் | | |
| Taluk | திருப்பூர் | Age | 52 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of March 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை:-**

கடந்த 04.01.2020 தேதி அன்று நான் அவிநாசியில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு மகனின் தொலைபேசி மூலம் ஒரு நபர் தொடர்பு கொண்டு லூர்துபுரம் அருகே என் மகனுக்கும் ஆஜர் எதிரிக்கும் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது என் மகனுக்கு தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. அருகில் இருந்த சதீஷ்குமார் என்பவரை விசாரித்த போது என் மகனும் ஆஜர் எதிரியும் இரு சக்கர வாகனத்தில் வந்த போது சேவூர் டு புளியம்பட்டி செல்லும் மெயின் ரோட்டில் லூர்து புரம் பிள்ளையார் தோட்டம் அருகில் ரோட்டின் வளைவில் அதிக வேகமாக ஓட்டி வந்து வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் கரடு முரடான மண் தரையில் பைக் வேகமாக சென்று இருவரும் பைக்கில் இருந்து தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்து விட்டதாகவும் இருவருக்கும் அடிபட்டுவிட்டதாகவும் சொன்னார். எதிரி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார். என் மகன் பின்னால் அமர்ந்து சென்றதாகவும் சொன்னார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது என் மகனுக்கு தலையில் வலது புறம் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. எதிரி சஞ்சைக்கும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. சம்பவ இடத்திலிருந்து என் மகனை ஆம்புலன்ஸ் மூலம் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என் மகன் ஆம்புலன்சில் வரும் வழியிலேயே காலமாகிவிட்டார். எதிரியை ஆம்புலன்ஸ் மூலம் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக எதிரியை கோவையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். மேற் சொன்ன விபத்து சம்பந்தமாக நான் சேவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பின்பு போலீசார் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு வந்து பிரேத விசாரணை செய்தார்கள். நான் அவிநாசி அரசு

மருத்துவமனையில் உடலில் இருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்தப் புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை கேள்விப்பட்ட பின் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்தை சதீஷ் என்பவர் பார்த்துள்ளார் அவர் சொன்ன பின்பு தான் எங்களுக்கு விபத்து பற்றிய விபரம் தெரிய வந்தது. விபத்து காலை 7.30 மணி அளவில் ஏற்பட்டதாக சொன்னார்கள். இருசக்கர வாகனத்தை என் மகன் தான் ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல எதிரி சதீஷ் தான் ஓட்டி சென்றார். என் மகன் தான் இருசக்கர வாகனத்தை வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல எதிரி தான் ஓட்டி சென்றார். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd. N.Keerthana)<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |